(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE IV ADDITIONAL DISTRICT JUDGE , MADURAI.

S.C .No. 323/17

**DEPOSITION OF PW 6 WITNESS FOR PROSECUTION / DEFENCE**

Name : சதீஸ்கண்ணன்

Father's name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 15.12.2017

மு வி ---

நான் தற்போது ஆணையூரில் குடியிருக்கிறேன். மெக்கானிக் வேலை பார்க்கிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். என் அம்மா பெயர் ஆர். விஜயா. என்னுடன் பிறந்தவர்கள் ஒரு அண்ணன் ஒரு தங்கை. 2 ம் எதிரி என் அண்ணன் அவர் பெயர் ராஜேஷ். அழகேந்திரா ஆட்டோ மொபைல்ஸ் உரிமையாளர் வீட்டில் என் அம்மா வீட்டு வேலை பார்க்கிறார் . என் அண்ணன் பெயிண்டிங் வேலை பார்த்தார். என் அண்ணனுக்கு கல்யாணம் ஆகிவிட்டது. அண்ணன் மனைவி பெயர் சுருதி. 28.2.17 அன்று பீபி குளத்திலுள்ள கம்பெனியில் வேலை பார்த்த போது அப்போது

என் அண்ணன் ராஜேஷ் மாலை சுமார் 4 மணியளவில் வந்தார். வீட்டில் கொலை நடந்துள்ளது என்றும் நீயும் அம்மாவும் வீட்டிற்கு போக வேண்டாம் என்று சொன்னார். லாவன்யாவின் கணவர் மணியை கொலை செய்து விட்டோம் என சொல்லி விட்டு வீட்டு சாவியை கொடுத்த விட்டு சென்று விட்டார். நான் வீட்டிற்கு 4.45 , 5 மணிக்கு போகும் போது வீட்டின் முன் கூட்டமாக இருந்தது. என் அம்மாவும் வந்து விட்டார். தகவல் தெரிந்து போலிசாரும் வந்து விட்டனர். என்னை அழைத்து சென்று காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தனர். நான் மேற்சொன்ன விவரங்களை போலிஸ் விசாரணையில் சொன்னேன். நீதிபதியிடம் இது சம்பந்தமாக வாக்குமூலம் கொடுத்தேன். நான் நீதிபதியிடம் கொடுத்த வாக்குமூலம் என்னிடம் காட்டப்படுவது அது அசாஆ 8. இது சம்பந்தமாக என்னை போலிசார் விசாரித்தனர்.

கு வி --- அனைத்து எதிரிகள் தரப்பில்

எங்கள் நிறுவனத்தில் பார்வையாளர்கள் பதிவேடு பராமரிக்கப்படுகிறது. வரும் பார்வையாளர்கள் அந்த பதிவேட்டில் கையெழுத்து போடுவார்களா என்றால் அவ்வாறு பதிவேடுகள் பராமரிக்கப்படுவதில்லை. எங்கள் வருகை பதிவேடு தான் பராமரிக்கப்படுகிறது. எங்கள் கம்பெனியில் சிசிடிவி கேம்ரா உள்ளது. எங்கள் கம்பெனியின் 2 நுழைவாயில்கள் உள்ளன. அதில் இரண்டு சிசிடிவி கேம்ரா உள்ளது. எங்களுகக்கு சொந்தமான ஒரு வீடு உள்ளது . அது தாற்போது என் தாயார் பெயரில் உள்ளது. எங்களுக்கு சொந்தமான வீடு என் தாயாருக்கு பிறகு என் அண்ணனுக்கு பங்கு கிடைக்க கூடாது என்பதற்காகவும்

நான் அவருக்கு எதிராக பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் தவறு. நான் சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில என் அண்ணன் ராஜேஷ் என்னை பார்க்க வரவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு என்னை பார்த்து என்னிடம் வீட்டிற்கு போக வேண்டாம் என்றும் , வீட்டு சாவியை கையில் கொடுத்தார் என்பதும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் தவறு. நானும் எதற்காக சண்டை போட்டேன் என்றால் என் அண்ணன் குடித்து விட்டு வந்து என் அம்மாவிடமும் அண்ணியிடமும் சண்டை போட்டு கொண்டிருந்தார் அதனால் எனக்கும் அவருக்கும் சண்டை வந்தது. எனக்கும் என் அண்ணன் ராஜேஷ்க்கும் உள்ள முன் விரோதம் காரணத்திற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கும் அவருக்கும் முன் விரோதம் கிடையாது. அதனால் என் அம்மா சென்று போலிசில் புகார் செய்தார். என் அண்ணனை உள்ளே தள்ளி விட வேண்டும் என்று புகார் செய்தார் என்றால் சரியல்ல., அவர் மேலும் பிரச்னை செய்யக்கூடாது என்பதற்காக அவ்வாறு செய்தார். என்னை போலிசார் எப்போதுமே விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. நான் நீதிபதியிடம் வாக்குமூலம் கொடுக்கும் போது பொய்யாக கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

நீதிமன்ற கேள்வி :--- என் தாயார் வேலைக்கு போகிறார். என் தாயார் அழகேந்திரா ஆட்டோ மொபைல்ஸ் நிறுவனர் வீட்டில் வீட்டு வேலை பார்க்கிறார். என் தாயார் காலை 6 மணிக்கு சென்று விட்டு இரவு 9 மணிக்கு வருவார்.